பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 114 நாள் : 24.08.2016

# அனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகள் / பதாகைகள் அகற்றுவது குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான கண்காணிப்புக் குழு கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்றது !!

---------

விளம்பர பலகைகள்/பதாகைகள் கண்காணிப்புக் குழுத் தலைவர் நீதியரசர் திரு.S.ராஜேஸ்வரன் அவர்கள், மன்ற உறுப்பினர்கள் திரு.பி.ஏகாம்பரம், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள், திரு.ஏ.எஸ்.ஜீவரத்தினம், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்களின் முன்னிலையில், அனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் மற்றும் பதாகைகள் அகற்றுவது குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான கண்காணிப்புக் குழு கூட்டம் அம்மா மாளிகையில் 23.08.2016 அன்று நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில் உயர்நீதிமன்ற உத்தரவின்படி, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும், அனுமதி பெறாமலும் வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகள் மற்றும் பதாகைகளை உடனடியாக அகற்றுவதற்கு மண்டலம் வாரியாக குழுக்கள் அமைத்து, அவற்றை உடனடியாக அகற்றி உயர்நீதிமன்றத்தில் பதிலுரை தாக்கல் செய்யுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், திருவிழாக்கள், விஷேச நிகழ்ச்சிகள் மற்றும் அரசியல் தலைவர்களின் வருகை குறித்து வைக்கப்படும் விளம்பர பலகைகளை மற்றும் பதாகைகளை நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் உடனடியாக அகற்றிட வேண்டும் என்ற உறுதிமொழி பெற்ற பின்பே அனுமதி அளிக்க வேண்டும். முன்திட்டம் இல்லாமல் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்காக வைக்கப்படும் விளம்பர பலகைகள் மற்றும் பதாகைகள் ஆகியவற்றிற்காக பெறப்படும் அனுமதியினை ஒற்றைசாளர முறையில் அளித்து, நிகழ்ச்சி முடிந்தவுடன் உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும், அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் தினமும் காலை ரோந்து சென்று, புது விளம்பர பலகைகள் மற்றும் பதாகைகள் ஏதும் வைக்கப்படாமல் தடுப்பதற்கு ஆவண செய்ய வேண்டும். அப்படி உத்தரவின்றி வைக்கப்படுபவை உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

இந்நிகழ்ச்சியில், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப. அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவீண் பி.நாயர், இ.ஆ.ப. அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சியர் (பொ) திருமதி.அழகு மீனா அவர்கள், காவல்துறை அலுவலர்கள், இரயில்வேதுறை அலுவலர்கள், நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**